1994 மே 4]

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல். —தொடர்ச்சி.

(ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS